**TNVR020041812025**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.

**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B (Hons)., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.

2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04-ஆம் நாள் செவ்வாய்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.908/2025**

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | | அரசுக்காக:–<br>காவல் சார்பு ஆய்வாளர்,<br>திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் நிலையம்,<br>குற்ற எண்.21/2025 |
| குற்றம்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | | ராமர்,<br>த/பெ.செல்வராஜ்,<br>80/10 மங்காபுரம், வடக்கு தெரு,<br>மங்காபுரம்,<br>திருவில்லிபுத்தூர். |
| சம்பவம் நடந்த நாள் | | 15.03.2025 |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | | 15.03.2025 |
| எதிரி கைதான நாள்<br><br>எதிரி பிணையில் சென்ற நாள் | | 15.03.2025 அன்றே காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| அரசு தரப்பு விசாரணை முடிவுற்ற நாள்<br><br>எதிரி தரப்பு விசாரணை முடிவுற்ற நாள் | –<br><br>– | 30.07.2026<br><br>இல்லை |
| எதிரி மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | – | 07.03.2026 |
| குற்றம் | | |

| | | |
|---|---|---|
| 1. சாட்டப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழ் |
| 2. வனையப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழ் |
| காலதாமதத்திற்கான காரணம் | – | சாட்சி விசாரணைக்காக தாமதம் |
| அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | – | அ.சா.1 13.03.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br>அ.சா.2 04.07.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br>அ.சா.3 04.07.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை<br>அ.சா.4 15.07.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை |
| எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | – | 16.07.2026 |
| எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச. பிரிவு 311 பிரிவின் படியான மனுக்கள் | – | இல்லை. |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P.பெத்துரதி, M.B,.A., B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | – | திரு.P.ஏமராஜன், B.A., B.L,, |
| எதிரியின் கூற்று | – | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |

| | | |
|---|---|---|
| நீதிமன்றத்தின் முடிவு | – | முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீது 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>மேலும் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கானது 11.08.2025ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 30.07.2026-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி, M.B,.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.P.ஏமராஜன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப் பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.........

## தீர்ப்புரை

இவ்வழக்கு கடந்த 15.03.2025ம் தேதி 08.00 மணிக்கு எதிரி திருவில்லிபுத்தூர் பிள்ளையார் நத்தம் அருகில் வைத்து சுமார் 05 லிட்டர் அளவுள்ள பிளாஸ்டிக் குடத்தில், சுமார் 2 லிட்டர் அளவுக்கு அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள்ளினை விற்பனை செய்யக்கூடிய நோக்கத்தில் வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி மீது 4 (1)(C) TNP Amendment Act 2024–ன் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிக்கு அரசு தரப்பில்

தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் BNSS பிரிவு 230ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, குற்றம் குறித்து வினவியபோது பொய் வழக்கு, குற்றவாளி இல்லை என்றார். போதிய கால அவகாசத்திற்கு பிறகு எதிரி மீது பிரிவு 4 (1)(C) TNP Amendment Act 2024–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது எதிரி பொய் வழக்கு, தான் குற்றவாளி இல்லை என மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.4 சாட்சிகள் விசாரணை செய்து, அ.சாஆ.1 மற்றும் அ.சாஆ.2 சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–

4-(1) அ.சா.1 திரு.கண்ணன் தனது சாட்சியத்தில், தான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 15.03.2025ம் தேதி காலை 08.00 மதுவிலக்கு அமலாக்க பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது தலைமை காவலர் 1034 ரமேஷ், தலைமைகாலர் 1659 பாலமுருகன் அவர்களுடன் மதுவிலக்கு குற்றங்கள் சம்பந்தமாக திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பிள்ளையார் நத்தம் ஏரியாவில் ரோந்து சென்ற போது திருவில்லிபுத்தூர் மங்காபுரம் செல்வராஜ் மகன் ராமர் அவயது 43 என்பவர் 5 லிட்டர் பிளாஸ்டிக் குடத்தில் 2 லிட்டர் அளவுள்ள வெள்ளை நிற பானத்துடன் நின்று கொண்டிருந்தவர் போலீஸ் பார்ட்டிகளாகிய தங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரிக்கையில் 2லிட்டர் பனங்கள் விற்பனைக்காக வைத்திருப்பதாக கூறியதாகவும், பின்னர் அவரை கைது செய்து காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின்படி பனங்கள்ளை கொட்டி அழித்தும் பிளாஸ்டிக் குடத்தை உடைத்து, பின்னர் அந்த இடத்தில் எதிரியை நிலையம் கொண்டு செல்ல தயாரிக்கலான அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் முன்வராததால் போலீஸ் பார்ட்டிகளாகிய தாங்களே கையொப்பம் இட்டதாகவும், பின்னர் எதிரி மற்றும்

அத்தாட்சியுடன் நிலையம் வந்து திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு குற்ற எண்.21/2025 பிரிவு.4(1)(C) TNP Amendment Act ன் கீழ் எதிரி மீது வழக்கு பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கையையும் அசல் அத்தாட்சியையும் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கு அனுப்பி வைத்து, மேல்விசாரணைக்காக வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்து, காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அத்தாட்சி அசாஆ.1 என்றும், முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(2) அ.சா.2 திரு.ரமேஷ் தனது சாட்சியத்தில், தான் தற்போது வத்திராயிருப்பு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 15.03.2025 அன்று 08.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் அமலாக்க பிரிவு சார்பு ஆய்வாளர் கண்ணன் அவர்களுடன் தானும் தகா 1659 பாலமுருகன் போலீஸ்பார்ட்டிகளாகிய தாங்கள் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய சராக பகுதிகளில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து செய்து கண்காணித்து வந்தபோது கிடைத்த ரகசிய தகவலை பெற்று பிள்ளையார்நத்தம் அருகில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த மங்காபுரம் வடக்குதெருவை சேர்ந்த ராமர் த/பெ.செல்வராஜ் வயது 45 என்பவர் அவரது கையில் சுமார் 5 லிட்டர் அளவுள்ள பிளாஸ்டிக் குடத்துடன் நின்றுகொண்டிருந்தவர் போலீஸ்பார்ட்டியாகிய தங்களை கண்டதும் ஓடஎத்தனித்தவரை தடுத்து நிறுத்தி கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் குடத்தை பார்த்தபோது சுமார் 2 லிட்டர் அளவுள்ள வெண்மை நிற திரவம் இருந்தது என்றும், அதை பற்றி கேட்டபோது பனங்கள் என்றும் விற்பனைக்கு வைத்திருப்பதாகவும் கூறியதாகவும், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் வைத்திருந்த குற்றத்திற்கு எதிரியை அந்த இடத்தில் வைத்து கைது செய்து பிளாஸ்டிக் குடத்தில் இருந்த பனங்கள்ளை காவல் ஆய்வாளரின் உத்தரவின் பிரகாரம் மண்ணில் கொட்டி அழித்தும் பிளாஸ்டிக் குடத்தை உடைத்தும் எதிரியை நிலையம் கொண்டு போக தயாரிக்கலான அத்தாட்சியில் கையொப்பமிட அந்த இடத்தில் தனிநபர்கள் யாரும் இல்லாததால் போலீஸ்பார்ட்டிகளாகிய தாங்களே

கையெழுத்து செய்ததாகவும், பின்னர் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண்.21/2025 பிரிவு.4(1)(C) TNP amendment Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அத்தாட்சியிலுள்ள 2 வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(3) அ.சா.3 திரு.பாலமுருகன் தனது சாட்சியத்தில், தான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 15.03.2025 அன்று 08.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் அமலாக்க பிரிவு சார்பு ஆய்வாளர் கண்ணன் அவர்களுடன் தானும் தகா 1034 ரமேஷ் போலீஸ்பார்ட்டிகளாகிய தாங்கள் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய சராக பகுதிகளில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து செய்து கண்காணித்து வந்தபோது கிடைத்த ரகசிய தகவலை பெற்று பிள்ளையார்நத்தம் அருகில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த மங்காபுரம் வடக்குதெருவை சேர்ந்த ராமர் த/பெ.செல்வராஜ் வயது 45 என்பவர் அவரது கையில் சுமார் 5 லிட்டர் அளவுள்ள பிளாஸ்டிக் குடத்துடன் நின்று கொண்டிருந்தவர் போலீஸ்பார்ட்டியாகிய தங்களை கண்டதும் ஓடஎத்தனித்தவரை தடுத்து நிறுத்தி கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் குடத்தை பார்த்தபோது சுமார் 2 லிட்டர் அளவுள்ள வெண்மை நிற திரவம் இருந்தது என்றும், அதை பற்றி கேட்டபோது பனங்கள் என்றும் விற்பனைக்கு வைத்திருப்பதாகவும் கூறியதாகவும், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் வைத்திருந்த குற்றத்திற்கு எதிரியை அந்த இடத்தில் வைத்து கைது செய்து பிளாஸ்டிக் குடத்தில் இருந்த பனங்கள்ளை காவல் ஆய்வாளரின் உத்தரவின் பிரகாரம் மண்ணில் கொட்டி அழித்தும் பிளாஸ்டிக் குடத்தை உடைத்தும் எதிரியை நிலையம் கொண்டு போக தயாரிக்கலான அத்தாட்சியில் கையொப்பமிட அந்த இடத்தில் தனிநபர்கள் யாரும் இல்லாததால் போலீஸ் பார்ட்டிகளாகிய தாங்களே கையெழுத்து செய்ததாகவும், பின்னர் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண்.21/2025 பிரிவு.4(1)(C) TNP amendment Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய சிறப்பு

சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அத்தாட்சியிலுள்ள முதல் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(4) அ.சா.4 திரு.காசிராஜன் தனது சாட்சியத்தில், தான் தற்போது சங்கரன்கோவில் நகர் காவல்நிலையத்தில் குற்றபிரிவு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 15.03.2025 அன்று திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்று காலை மதுவிலக்கு சம்மந்தமாக மேற்படி காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் கண்ணன், தகா.1034 ரமேஷ் மற்றும் தகா.பாலமுருகன் ஆகியோர்கள் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து மேற்கொண்டு பிள்ளையார்நத்தம் அருகில் வைத்து ஆஜர் எதிரியை கைது செய்து நிலையம் அழைத்து வந்து 09.45 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் கண்ணன் எதிரிமீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கு கோப்பை தனது பார்வைக்கு வைத்தார் என்றும், பின்னர் அன்றைய தினமே காலை 11.00 மணியளவில் இவ்வழக்கை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மேற்படி சிறப்பு சார்பு ஆய்வாளர் கண்ணன், தகா.1034 ரமேஷ் மற்றும் தகா.பாலமுருகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், ஆஜர் எதிரியை தக்க இருநகர் ஜாமீனில் விடுவித்ததாகவும், பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து அன்றைய தினமே எதிரி மீது பிரிவு.4(1)(C) TNP Amendment Act 2024 ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

5) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டு, எதிரிக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சிய சங்கதிகளை தொகுத்து எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் படி வினவியபோது எதிரி சாட்சியை பொய் எனக் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என சொன்னார். இவ்வழக்கில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) <u>தீர்வுக்குரிய பிரச்சனை :–</u>

அரசு தரப்பால் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

7) கடந்த 15.03.2025ம் தேதி 08.00 மணிக்கு எதிரி திருவில்லிபுத்தூர் பிள்ளையார் நத்தம் அருகில் வைத்து சுமார் 05 லிட்டர் அளவுள்ள பிளாஸ்டிக் குடத்தில், சுமார் 2 லிட்டர் அளவுக்கு அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள்ளினை விற்பனை செய்யக்கூடிய நோக்கத்தில் வைத்திருந்த வைத்திருந்தார் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

8. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரியை தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

9. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கானது புள்ளி விபரத்திற்காக எதிரி மீது போடப்பட்டுள்ளதாகவும், அதனால் இவ்வழக்கின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட வில்லை என்றும், எனவே எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

10. அ.சா.1 தனது சாட்சியத்தில்,, கடந்த 15.03.2025ம் தேதி காலை 08.00 மதுவிலக்கு அமலாக்க பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது தலைமை காவலர் 1034 ரமேஷ், தலைமைகாலர் 1659 பாலமுருகன் அவர்களுடன் மதுவிலக்கு குற்றங்கள் சம்பந்தமாக திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பிள்ளையார் நத்தம் ஏரியாவில் ரோந்து சென்ற போது திருவில்லிபுத்தூர் மங்காபுரம் செல்வராஜ் மகன் ராமர் வயது 43 என்பவர் 5 லிட்டர் பிளாஸ்டிக் குடத்தில் 2 லிட்டர் அளவுள்ள வெள்ளை நிற பானத்துடன் நின்று

கொண்டிருந்தவர் போலீஸ் பார்ட்டிகளாகிய தங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரிக்கையில் 2 லிட்டர் பனங்கள் விற்பனைக்காக வைத்திருப்பதாக கூறியதாகவும், பின்னர் அவரை கைது செய்து காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின்படி பனங்கள்ளை கொட்டி அழித்தும் பிளாஸ்டிக் குடத்தை உடைத்து, பின்னர் அந்த இடத்தில் எதிரியை நிலையம் கொண்டு செல்ல தயாரிக்கலான அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் முன்வராததால் போலீஸ் பார்ட்டிகளாகிய தாங்களே கையொப்பம் இட்டதாகவும், பின்னர் எதிரி மற்றும் அத்தாட்சியுடன் நிலையம் வந்து திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு குற்ற எண்.21/2025 பிரிவு.4(1)(C) TNP Amendment Act ன் கீழ் எதிரி மீது வழக்கு பதிவு செய்ததாகவும், மேல்விசாரணைக்காக வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்து, காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தாகவும் தன்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

11. மேலும் தனது குறுக்கு விசாரணையில், மேற்படி பிள்ளையார்நத்தம் உள்ள பகுதிகளில் 1000 த்திற்கு மேற்பட்ட பனை மரங்கள் உள்ளதாகவும். எதிரி குறிப்பாக எந்த மரத்திலிருந்து பனங்கள் இறங்கினார் என்பது குறிப்பிடப்படவில்லை என்றும், எதிரியிடமிருந்து பனைமரம் ஏறுவதற்கு பயன்படுத்தும் அரிவாள், கால்தலை, கம்பு போன்றவை கைப்பற்றப்படவில்லை என்றும், மேற்படி எதிரியிடம் கைப்பற்றியதாக கூறப்படும் பானமானது பனங்கள் என்று கண்டுபிடிப்பதற்கு தான் சிறப்பு பயிற்சிகள் எதுவும் எடுக்கவில்லை என்றும், மேற்படி கைப்பற்றியதாக கூறப்படும் குடத்தினை புகைப்படம் எடுக்கப்படவில்லை என்றும், மேற்படி கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பொருட்களை அழிப்பதற்கு முன் நீதிமன்றத்தில் அனுமதி எதுவும் பெறப்படவில்லை என்றும், மேற்படி கைப்பற்றியதாக கூறப்படும் சொத்துக்களை ஆய்வாளர் சொன்னதன் பேரில் அழித்ததாகவும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும், எதிரியை சோதனை செய்வதற்கு முன் நீதிமன்றத்திலோ அல்லது மேல் அதிகாரிகளிடமோ முன் அனுமதி பெறப்படவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 15.03.2025 அன்று 08.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் அமலாக்க பிரிவு சார்பு ஆய்வாளர் கண்ணன் அவர்களுடன் தானும் தகா 1659 பாலமுருகன் ஆகியோர்கள் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய சராக பகுதிகளில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து செய்து கண்காணித்து வந்தபோது கிடைத்த ரகசிய தகவலை பெற்று பிள்ளையார்நத்தம் அருகில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த மங்காபுரம் வடக்குதெருவை சேர்ந்த ராமர் த/பெ.செல்வராஜ் வயது 45 என்பவர் அவரது கையில் சுமார் 5 லிட்டர் அளவுள்ள பிளாஸ்டிக் குடத்துடன் நின்றுகொண்டிருந்தவர் போலீஸ்பார்ட்டியாகிய தங்களை கண்டதும் ஓடஎத்தனித்தவரை தடுத்து நிறுத்தி கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் குடத்தை பார்த்தபோது சுமார் 2 லிட்டர் அளவுள்ள வெண்மை நிற திரவம் இருந்தது என்றும், அதை பற்றி கேட்டபோது பனங்கள் என்றும் விற்பனைக்கு வைத்திருப்பதாக கூறியதாகவும், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் வைத்திருந்த குற்றத்திற்கு எதிரியை அந்த இடத்தில் வைத்து கைது செய்து பிளாஸ்டிக் குடத்தில் இருந்த பனங்கள்ளை காவல் ஆய்வாளரின் உத்தரவின் பிரகாரம் மண்ணில் கொட்டி அழித்தும் பிளாஸ்டிக் குடத்தை உடைத்தும் எதிரியை நிலையம் கொண்டு போக தயாரிக்கலான அத்தாட்சியில் கையொப்பமிட அந்த இடத்தில் தனிநபர்கள் யாரும் இல்லாததால் போலீஸ்பார்ட்டிகளாகிய தாங்களே கையெழுத்து செய்ததாகவும், பின்னர் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண்.21/2025 பிரிவு.4(1)(C) TNP amendment Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. மேலும் தனது குறுக்கு விசாரணையில், பிள்ளையார்நத்தம் பகுதிகளில் 1000 த்திற்கும் மேற்பட்ட பனை மரங்கள் உள்ளதாகவும் எதிரி குறிப்பாக எந்த மரத்திலிருந்து பனங்கள் இறங்கினார் என்பது குறிப்பிடப்படவில்லை என்றும், இவ்வழக்கின் சம்பவம் நடந்ததாக கூறப்படும் மரத்தினை குறிப்பிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எதிரியை கைது செய்த போது பனைமரம் ஏறுவதற்கு பயன்படுத்தும் அரிவாள், கால்தலை, கம்பு போன்றவை

கைப்பற்றப்படவில்லை என்றும், மேற்படி எதிரியிடம் கைப்பற்றியதாக கூறப்படும் பானமானது பனங்கள் என்று கண்டுபிடிப்பதற்கு தான் சிறப்பு பயிற்சிகள் எதுவும் எடுக்கவில்லை என்றும், தாங்கள் கைப்பற்றியதாக கூறப்படும் குடத்தினை புகைப்படம் எடுக்கப்படவில்லை என்றும், மேற்படி கைப்பற்றியதாக கூறப்படும் சொத்துக்களை ஆய்வாளர் சொன்னதன் பேரில் அழித்ததாகவும், மேற்படி சம்பவம் நடந்தாக கூறப்படும் இடமானது ஆட்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும், எதிரியை சோதனை செய்வதற்கு முன் நீதிமன்றத்திலோ அல்லது மேல் அதிகாரிகளிடமோ முன் அனுமதி பெறப்படவில்லை என்றும், இவ்வழக்கில் அழித்தல் மகஜர் தயார் செய்யப்படவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 15.03.2025 அன்று 08.00 மணிக்கு தானும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோருடன் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய சராக பகுதிகளில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து செய்து கண்காணித்து வந்தபோது கிடைத்த ரகசிய தகவலை பெற்று பிள்ளையார்நத்தம் அருகில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த மங்காபுரம் வடக்குதெருவை சேர்ந்த ராமர் என்பவர் அவரது கையில் சுமார் 5 லிட்டர் அளவுள்ள பிளாஸ்டிக் குடத்துடன் நின்று கொண்டிருந்தவர் போலீஸ்பார்ட்டியாகிய தங்களை கண்டதும் ஓடஎத்தனித்தவரை தடுத்து நிறுத்தி கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் குடத்தை பார்த்தபோது சுமார் 2 லிட்டர் அளவுள்ள வெண்மை நிற திரவம் இருந்தது என்றும், அதை பற்றி கேட்டபோது பனங்கள் என்றும் விற்பனைக்கு வைத்திருப்பதாகவும் கூறியதாகவும், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் வைத்திருந்த குற்றத்திற்கு எதிரியை அந்த இடத்தில் வைத்து கைது செய்து பிளாஸ்டிக் குடத்தில் இருந்த பனங்கள்ளை காவல் ஆய்வாளரின் உத்தரவின் பிரகாரம் மண்ணில் கொட்டி அழித்தும் பிளாஸ்டிக் குடத்தை உடைத்தும் எதிரியை நிலையம் கொண்டு போக தயாரிக்கலான அத்தாட்சியில் கையொப்பமிட அந்த இடத்தில் தனிநபர்கள் யாரும் இல்லாததால் போலீஸ் பார்ட்டிகளாகிய தாங்களே கையெழுத்து செய்ததாகவும், பின்னர் நிலையம்

வந்து எதிரி மீது நிலைய குற்ற எண்.21/2025 பிரிவு.4(1)(C) TNP amendment Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்ததாகவும், அத்தாட்சியிலுள்ள முதல் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

15. மேலும் தனது குறுக்கு விசாரணையில், பிள்ளையார்நத்தம் உள்ள பகுதியில் 1000 க்கும் மேல் பனைமரங்கள் இருக்கும் என்றும், எதிரி எந்த பனை மரத்திலிருந்து பனங்கள் இறக்கினார் என்பது குறிப்பிடப்படவில்லை என்றும், சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தினை குறிப்பிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகஜர் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், எதிரியை கைது செய்த போது பனைமரம் ஏறுவதற்கு பயன்படுத்தும் அரிவாள், கால்தலை, கம்பு போன்றவை கைப்பற்றப்படவில்லை என்றும், மேற்படி எதிரியிடம் கைப்பற்றியதாக கூறப்படும் பானமானது பனங்கள் என்று கண்டுபிடிப்பதற்கு தான் சிறப்பு பயிற்சிகள் எதுவும் எடுக்கவில்லை என்றும், தாங்கள் கைப்பற்றியதாக கூறப்படும் குடத்தினை புகைப்படம் எடுக்கப்படவில்லை என்றும், மேற்படி கைப்பற்றப்பட்ட சொத்துக்களை காவல் அய்வாளரின் உத்தரவின் பேரில் அழித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி பனங்கள்ளை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எதிரி பனங்கள் இறக்கியதாக கூறப்படும் இடத்தின் உரிமையாளர் யாரும் தங்களிடம் எதிரி மீது புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றும், எதிரியை சோதனை செய்தவற்கு முன் எதிரியிடமோ, அல்லது நீதிமன்றத்திலோ அனுமதி கடிதம் பெறவில்லை என்றும், கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பனங்கள்ளின் மாதிரிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேற்படி பனங்கள்ளை கீழே கொட்டி அழித்த போதும், குடத்தை உடைத்த போதும் புகைப்படம் எடுக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கின் சொத்துக்களை அழித்ததற்கான அழித்தல் மகஜர் தயார் செய்யப்படவில்லை என்றும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை தன்னால் தயார் செய்யப்பட்டதாகவும்,

முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை ஒரே நாளில் தயார் செய்யப்பட்டது, என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. அ.சா.4 தனது சாட்சியத்தில், கடந்த 15.03.2025 அன்று திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்று காலை மதுவிலக்கு சம்மந்தமாக அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்கள் ரோந்து மேற்கொண்டு பிள்ளையார்நத்தம் அருகில் வைத்து இவ்வழக்கின் எதிரியை கைது செய்து நிலையம் அழைத்து வந்து 09.45 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் கண்ணன் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கு கோப்பை தனது பார்வைக்கு வைத்ததாகவும், பின்னர் அன்றைய தினமே காலை 11.00 மணியளவில் இவ்வழக்கை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கின் எதிரியை தக்க இருநகர் ஜாமீனில் விடுவித்ததாகவும், பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து அன்றைய தினமே எதிரி மீது பிரிவு.4(1)(C) TNP Amendment Act 2024ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

17. மேலும் தனது குறுக்கு விசாரணையில், பிள்ளையார்நத்தம் பகுதியில் நிறைய குடியிருப்பு வீடுகள் உள்ளது என்றும், ஆனால் இவ்வழக்கு சம்பவமானது பிள்ளையார்நத்தம் கிராமத்திற்கு வெளியில் பனந்தோப்பு உள்ள பகுதியில் நடந்துள்ளது என்றும், இவ்வழக்கு சம்பவமானது, குறிப்பிட்டு எந்த இடத்தில் நடந்தது என்று இவ்வழக்கில் குறிப்பிடப்படவில்லை என்றும், பிள்ளையார்நத்தம் அருகே என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி எதிரி ஏறியதாக கூறப்படும் பனைமரத்தை அ.சா.1 புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து தனக்கு அனுப்பியதாகவும், ஆனால் அதனை இவ்வழக்கு கோப்புடன் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேற்படி பனங்கள்ளை அழிப்பதற்கு முன் நீதிமன்றத்தில் உத்தரவு பெறப்படவில்லை என்றும், எதிரியிடம் எழுத்து மூலமாக

ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும், ஆனால் அதனை வீடியோ பதிவு செய்ததாகவும், மேற்படி வீடியோவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

18. மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்ததிலிருந்து, அ.சா.1, முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும், பனங்கள்ளின் புளித்த வாடையை கண்டுபிடிப்பதற்கு தாங்கள் சிறப்பான பயிற்சி எதுவும் மேற்கொள்ளவில்லை என்றும், பனங்கள்ளை கொட்டி அழிக்கும் பொழுதும், குடத்தை உடைக்கும் பொழுதும் புகைப்படம் எடுக்கப்படவில்லை என்றும், பனங்கள் ஏற பயன்படுத்தும் கருவிகள் எதையும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளனர். மேலும் மேற்படி இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.4 தனது சாட்சியத்தில், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் எழுத்து மூலமாக பெறப்படவில்லை என்றும், ஆனால் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை வீடியோ பதிவு செய்ததாகவும், அதனை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும், மேற்படி எதிரி ஏறியதாக கூறப்படும் பனைமரத்தையும் அ.சா.1 தனக்கு புகைப்படம் எடுத்து அனுப்பியதாகவும் கூறியுள்ளார். ஆனால் அதனையும் இவ்வழக்கில் தகாக்ல் செய்யவில்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளார்.

19. பொதுவாக குற்றவியல் வழக்குகளில் குற்றம் நடந்த இடத்தை விசாரணை அதிகாரி பார்வையிட்டு அங்குள்ள சூழ்நிலைகளையும் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் ஆவணப்படுத்துவது புலன் விசாரணை அதிகாரியின் அடிப்படை கடமையாகும். அதுமட்டுமின்றி பார்வை மகஜர் மற்றும் வரைபடம் ஆகியவை சம்பவயிடத்தை பற்றிய முக்கியமான பதிவாகும். மேலும் மற்ற சாட்சிகளின் சாட்சியங்களை உறுதிப்படுத்தவும் அவை முக்கியமான ஆவணங்களாக விளங்குகிறது. ஆனால் இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார்

செய்யப்படாதது இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் குறித்த நியாயமான சந்தேகத்தை இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது.

20. தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் 1937 சட்ட பிரிவு 32 (C)–ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வரைமுறையின்படி கள், வாஷ் அல்லது சொண்டிசோரு, ஆகியவை இப்பிரிவின் கீழ் ஒரு அலுவலர் அல்லது நபரால் கைப்பற்றப்பட்டால் அந்த அலுவலர் அல்லது நபர் அவற்றை கண்ட அந்த இடத்திலேயே அழித்துவிட்டு பின்னர் அத்தகையை கள், வாஷ் அல்லது சொண்டிசோரு வைக்கப்பட்டிருந்த பானைகள் அல்லது வேறு கொள்கலன்கள் ஆகியவற்றை காவல் ஆய்வாளர் அல்லது மதுவிலக்கு அலுவலர் அல்லது அந்த வழக்கை விசாரணை செய்வதற்கு ஆள்வரை கொண்டுள்ள குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆகியவருக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஆனால் இவ்வழக்கில் அவ்வாறு பனங்கள் இருந்ததாக கூறப்படும் குடம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. மாறாக சம்பவ இடத்திலேயே மேற்படி குடத்தை உடைத்து அழித்துவிட்டதாக சாட்சிகளால் கூறப்பட்டுள்ளது.

21. மேலும் இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. அதுமட்டுமின்றி சம்பவ இடத்தில் பல குடும்பங்கள் வசித்து வந்ததாக கூறப்பட்டுள்ள போதும் அவர்கள் யாரிடமும் சாட்சியாக அத்தாட்சியில் கையெழுத்து பெறப்படவில்லை என்பதை இவ்வழக்கின் சாட்சிகள் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் போலீஸ் பார்ட்டிகளே அத்தாட்சியில் கையெழுத்து செய்துள்ளனர். இவ்வழக்கின் சம்பவம் நடந்ததாக கூறப்படும் 15.03.2025 அன்றே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 18.03.2025 அன்று தான் நீதிமன்றத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்படி காலதாமதத்திற்கான தகுந்த விளக்கமும் சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் வெளிப்படவில்லை. அதுமட்டுமின்றி இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பபடுவதற்கு முன்பே எதிரி மீது கடந்த 15.03.2025 அன்றே குற்ற இறுதியறிக்கை தயார் செய்யப் பட்டுள்ளது. ஆனால் நீதிமன்றத்தில் கடந்த 09.08.2025 அன்று தான் தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை கருத்தில் கொண்டும், புலன் விசாரணையிலுள்ள குறைபாடுகளை கருத்திற் கொண்டும், வழக்கின் முக்கிய ஆவணங்களான பார்வை மகஜர் மற்றும் வரைபடம் போன்றவற்றை தயார் செய்யப்படாததை கருத்திற் கொண்டும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பணங்கள்ளை மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்விற்கு அனுப்ப தவறியதை கருத்தில் கொண்டும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படாததைக் கருத்தில் கொண்டும், மேலே விவரிக்கப்பட்ட காரணங்களை கருத்திற்கொண்டும் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட வில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

22. முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீது 4 (1)(C) TNP Amendment Act 2024–ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

23. மேலும் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04-ஆம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

அ.சா.1 திரு.கண்ணன்

அ.சா.2 திரு.ரமேஷ்

அ.சா.3 திரு.பாலமுருகன்

அ.சா.4 திரு.காசிராஜன்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

அ.சா.ஆ.1 – அத்தாட்சி

அ.சா.ஆ.2 – முதல் தகவல் அறிக்கை

**<u>அரசு தரப்பு சான்றுப் பொருள்</u>** – இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை

SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

| | |
|---|---|
| 1. | எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தப்படவில்லை. |
| 2. | வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 3. | நடுவர் தீர்ப்புரையின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். |
| 4. | இவ்வழக்கில் வழக்குச் சொத்து தாக்கல் செய்யப்படவில்லை. |
| 5. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |